**உழவு**

“வேலய்யா, வேலய்யா, என்ன.. ரொம்ப வேலையா?” கேட்டபடியே வீட்டின் உள்ளே நுழைந்தார் ரியல் எஸ்டேட் சுந்தரம்.

மண்வெட்டிக்கு கணைதட்டிக் கொண்டிருந்த வேலய்யா குரல் கேட்டதும் பதறி, எழுந்து, நாற்காலியை இழுத்துப் போட்டார்.

“ஐயா, என்னங்கையா விசேஷம்? நீங்கள் வந்துருக்கீங்க.. சொல்லிஅனுப்பியிருந்தா நீங்க சொன்ன இடத்துக்க நானே வந்துருப்பேனே..”

“பரவாயில்ல.. நீ வந்தா என்ன? நா வந்தா என்ன? எல்லாம் விசேஷமான சேதிதான். நீயும் அப்படி உட்காரு, மழை தண்ணீ பெய்றதில்ல, வெவசாயத்த கட்டிக்கிட்டு அழுவுறியே.. வேறெதாச்சும் ஆகுற பொழப்ப பார்க்க வேண்டியதுதானே”

“இருக்கட்டுங்கய்யா.. என்னிக்கும் வராதவுக வந்திருக்கீங்க.. என்ன விசேஷ சேதி? வீட்டுல ஏதாச்சும் விசேஷம் வைச்சிருக்கீங்களா?”

”அப்படிலாம் ஒன்னுமில்ல வேலய்யா.. நா நேரா விஷயத்துக்கு வாரேன். உன் வயக்காட்டுக்குப் பக்கத்துல நாலு வழிச்சாலை வரப்போறது உனக்குத் தெரியும்ல. உன் வயலுக்குப் பக்கத்து வயக்காரங்களாம் அடிச்சயோகத்தப் பயன்படுத்திக்கிட்டாங்க, உன்னோட நிலம் மட்டும் தான் மிச்சம். உன்னோடத நீ நல்ல விலைக்கு எங்கிட்ட கொடுத்துட்டினா சட்டுபுட்டுனு மொத்தத்ததுக்கும் அப்ரூவல் வாங்கி பிளாட் பிரிச்சு பெரிய நகராக்கிடுவோம். அதுல உனக்கு வேணும்னா குறைச்ச விலைக்கு ஒரு பிளாட் முடிச்சுத் தர்றேன். அதுக்கு கமிஷனா ஒத்த ரூபா எனக்குத் தரவேண்டாம். நம்ம பிளாட் பக்கத்துலேயே இஞ்சினியரிங் காலேஜ், தியேட்டர் இதுலாம் வரப்போகுது. நாளுக்கு நாள் ரேட் வேற கூடிட்டேப் போகுது”

”ஐயா.. மன்னிக்கனும், நா என் நிலத்த விக்குறதா இல்லீங்க…”

”இன்னும் நா ரேட்டே சொல்லல.. அதான் மறுக்குற, அவசரப்படாத நீ எதிர்பார்க்குறதுக்கு மேலேயே நா கொடுக்குறேன்” நமட்டுச் சிரிப்பு சிரித்தார்.

”கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் எனக்கு வேண்டாங்கய்யா..”

”என்னது? கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் நிலத்தக் கொடுக்க மாட்டியா? அப்படியென்ன இருக்கு உன் வயக்காட்டுல? தங்கமா? இல்ல வைரமா?”

”அதுக்குலாம் மேல.. எங்க பாட்டன் பூட்டனோட வேர்வை. எங்கப்பன் ஆத்தாளோட உசிரு. என்னோட உழைப்பு எல்லாமே அதுலதான்யா இருக்கு”

”நீ சொல்ற எதாலயும் உன் பையன படிக்க வைக்க முடியாது. உன் பொண்ண கல்யாணத்தப் பண்ணி கரையேத்த முடியாது”.

”ஐயா, மறுக்குறேன்னு தயவுசெஞ்சு தப்பா நினச்சுடாதீங்க. என் மனசுலயும் உடம்புலயும் தெம்பிருக்கு. எம் புள்ளைகள என்னால நிச்சயம் நல்ல நிலைக்கு கரைசேர்க்க முடியும். உங்களுக்கே தெரியும்.. நம்ம ஊரு 5 வருஷம்

முன்ன எப்படியிருந்தது? இப்போ எப்படி இருக்குன்னு? நெல்லு முளச்ச இடமெல்லாம் இப்போ கல்லு முளச்சுக் கிடக்கு. சோறு போட்ட நெலத்த கூறுபோட்டு வித்தா.. நம்ம சாமி நம்மள மன்னிக்குமாயா? இத்தினி வருஷமா என் குடும்பம் கடையரிசிய நம்பி உலை பொங்குனதில்ல. சுயமா உழைச்சு அதுல கிடச்ச கால் வயிறு கஞ்சியக் குடிச்சாலே போதும்யா.. உடம்புலயும் மனசுலயும் அப்படி ஒரு தெம்பும் சந்தோஷமும் கிடைக்கும். அத விக்கிறதுக்கு நா தயாரா இல்ல. மறுக்குறதுக்கு மன்னிக்கணும். அது வெறும் பூமி மட்டுமில்லங்கய்யா. எங்க குலசாமிய்யா..” என்று சொல்லியபடி மண்வெட்டியைத் தோளில் போட்டுக் கிளம்பிய வேலய்யாவையே பிரமிப்பாய் பார்த்து நின்றார்.

”இவ்வளவு படிச்ச பணத்தாச பிடிச்சு சுயலமா அலையுற நாம எங்க? படிப்பறிவில்லாட்டியும் பூமி மேலயும், உழைப்பு மேலேயும் நம்பிக்கை வைச்சு பணத்த துச்சமா நினைக்குற வேலய்யா எங்க?”

சுந்தரத்தின் கண்களில் வேலய்யாவின் உருவம் குறைய குறைய மனசுக்குள் பிரம்மாண்டமாய் விசுவரூபமெடுத்தான் வேலய்யா.

**குறள்:** இரவார் இரப்பார்க்கென் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (1035)

**பொருள்:**

உழுது உண்பவர்கள் பிறரிடம் யாசிக்க மாட்டார்கள். மாறாக யாசிப்பவர்களுக்குக் கொடுப்பார்கள்.

ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

## துளிப்பா

**சுனாமி**

எத்தனைமுறை
என் காலடியை
தொட்டுச் சென்றாலும்
மன்னிக்கவேமாட்டேன்
இப்படிக்கு,
**கடற்கரை!**

### எது அழகு?

வண்ணமும் வளைதலும்
இல்லாமல்
வானவில் அழகில்லை!
தென்றலும் புயலும்
இல்லாமல்
காற்று அழகில்லை!
இன்பமும் துன்பமும்
இல்லாமல்
வாழ்வு அழகில்லை!
மனத்தால் இன்புறும்
வாழ்வியலே
அழகுக்கு அழகு!

**- இரா.கார்த்திக்**

**குலதெய்வ வழிபாடு**

தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது குலதெய்வத்தைக் கண்டிப்பாக மாதம் ஒருமுறையாவது சென்று வழிபட்டு வரவேண்டும். அப்படிச் சென்று வரமுடியாத பட்சத்தில் வருடத்திற்கு ஒரு முறையாவது நேரில் சென்று பூசை செய்து வழிபட வேண்டும். மற்ற கோயிலுக்குச் செல்லும் போது தேங்காய், பழம், மாலை வாங்கி அர்ச்சனை செய்து திரும்புவீர்கள். ஆனால் குலதெய்வத்தை வழிபடச்செல்லும்போது கூடுதலாக ஒரு கடமையும் இருக்கின்றது. உங்களது குலதெய்வக் கோவிலுக்குச் சென்றதும் பொங்கல் வைத்து படையல் போட்டு வணங்கிய பின்னரே, அர்ச்சனை செய்து திரும்ப வேண்டும். இதைச் செய்வதே முறையான குலதெய்வ வழிபாடு ஆகும். உங்களது குலதெய்வத்தின் படத்தை வீட்டுப் பூசையறையிலும், எப்போதும் வைத்திருக்க வேண்டும். வீட்டில் ஒவ்வொரு காரியம் தொடங்குவதற்கு முன்பும் குலதெய்வத்தை வழிபட்ட பின்னரே செயலில் இறங்க வேண்டும். ஏனென்றால் வழிபடு தெய்வம் நிற்புங்காப்ப பொருளுரைப்பர் வ.சுப.மாணிக்கனார்.

**-ஆ.சகுந்தலா**

## பாரம்பரியச் சமையல்

**வெள்ளைப் பணியாரம்**

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| பச்சரிசி | - | ஒரு ஆழாக்கு (200கி) |
| உளுந்தம் பருப்பு | - | அரை ஆழாக்கு (50கி) |
| எண்ணெய் | - | தேவையான அளவு |
| பால் | - | சிறிதளவு (1 டீஸ்பூன்) |
| சீனி | - | சிறிதளவு (1டீஸ்பூன்) |

**செய்முறை**

பச்சரிசியையும், உளுந்தம்பருப்பையும் 1 மணிநேரம் ஊறவைத்து அதில் பாலையும், சிறிதளவு சீனியையும் சேர்த்துத் தோசை மாவு பதத்தில் நன்கு அரைத்துக் கொள்ளவும் பின் ஒரு கடாயில் எண்ணெயை ஊற்றிக் காயவைத்து ஏந்தலாக உள்ள ஒரு கரண்டியில் மாவை எடுத்து எண்ணெயில் வட்டமாக ஊற்றி, அடுப்பைக் குறைத்து வைத்து ஊற்றிய மாவைச் சிவக்க விடாமல் வெண்ணிறமாக எடுத்தால் வெள்ளைப் பணியாரம் தயார். அந்த பணியாரத்துடன் காரச்சட்டினியைச் சேர்த்து உண்டால் மிகச் சுவையாக இருக்கும்.

**-சு.லாவண்யா**

**புதுமைப் பெண்கள் பூமிக்குக் கண்கள்**

அன்பினுருவாய்ப் பெண்...
அமைதியினுருவாய்ப் பெண்...
பண்பினுருவாய்ப் பெண்...
பாசத்தினுருவாய்ப் பெண்...
அடுப்பூதும் பெண்ணிற்குப் படிப்பதற் கென்ற பொழுது
பட்டங்கள் ஆளப் பாரினில் உயர்ந்தனர்...
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்....
பாரதம் போற்றச் சாதனைப் படைத்தனர்
விண்ணைத் தொட்ட சாவ்லா சுனிதா
விண்ணிலும் தியாகச் செம்மலாய் அன்னைதெரசா
வீரத்தின் நங்கையாய் வேலுநாச்சியார்
வீறுகொண்ட வீரப் பெண்ணாய் கிரண்பேடி
விளையாட்டில் விதை விதைத்தாள் சானியா
விளையாட்டில் மரக் கிளையானாள் ஜோஸ்னா
தற்காப்புக்கலை பத்மஸ்ரீ விருதுபெற்றாள் களரிகலை
தன்னைப் பாதுகாக்கும் திறம் பெற்ற பெண்ணானாள்
தமிழ் வளர்க்க அதியமான் கனிஈந்தான் ஔவையிடம்
தமிழ் வளர்க்கும் அறிவுப் பெண்கள் இலக்கியக்கலையில்
அறிவியலின் கண் திறந்தாள் முத்துலெட்சுமி
அறவழியில் நாட்டின்கண் திறக்கும் நந்தினி
சனநாயகத்தைக் கட்டிக்காத்த  ஜெயலலிதா
சனாதிபதியிடம் விருதுபெற தமிழ்ப்பாவை
நாட்டின் அறிவுக்கண்ணாக விளங்கும் எம்குலப்பெண்கள்
நாடாளப் பிறந்த புதுமைப் பெண்கள் - அப்
புதுமைப் பெண்களே பூமிக்குக் கண்கள்

**-தே.தீபா**

## "கணபதி பற்றிய பழமொழிகள்"

கணபதி வழிபாடு பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வளர்ந்ததால் கணபதி பற்றிய பல பழமொழிகளைத் தமிழர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பயன்படுத்துகின்றனர் அவற்றைக் காண்போம்.

**பிள்ளையார் சுழி போட்டாயிற்று**

ஒரு செயலைத் தொடங்கிவிட்டோம் என்பதைக் குறிக்க அச்செயலுக்குப் பிள்ளையார் சுழி போட்டாயிற்று என்பர் இதையே பிள்ளையார்குட்டுக் குட்டியாயிற்று என்றும் கூறுகின்றனர்.

**ஒண்ட வந்த பிள்ளையார் ஊர்ப்பிள்ளையாரை விரட்டிவிட்டாராம்**

ஊர்ப்பிள்ளையார் என்பவர் ஏற்கனவே தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்திலேயே வழிபடப்பெற்ற சேயோன் எனப்படும் முருகன் ஆவார். இவரது வழிபாட்டைக் குறைக்கச் செய்தவர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ்நாட்டிற்கு வந்த பிள்ளையார் ஆவார். சங்க காலத் தெய்வங்களில் எத்தனையோ தெய்வம் தெரியாமல் மறைந்து போயின வேற்றூரிலிருந்து வந்த பிள்ளையார் தமிழ்ப் பிள்ளையாராக ஆகிவிட்டார் என்பது கருத்து

**பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது**

ஒரு செயலைத் தொடங்க அது வேறொரு செயலாக மாறிவிட்டது எனப் பொருள் தருகிறது. இப்பழமொழி - பஜனைப்பாடல்களைத் தொடங்குவோர் முதலில் கணபதி துதியில் தொடங்கி இறுதியில் அனுமார் துதியில் முடிப்பர் இதுவே இப்பழமொழிப்பொருள்.

**கணபதி பூசை கைமேற்பலன்**

கணபதியைப் பூசை செய்தால் உடனே பலன் கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது. ஆனால் இன்று கணபதி பூசை கைமேற்பணம் என்பர்.

**பிள்ளையார் வேஷம் போட்டாயிற்றா**

கருவுற்ற பெண்களின் பெருவயிற்றைப் பார்த்து இவ்வாறு கூறுவார்கள்

**பிள்ளையாருக்கு எப்போது திருமணம்**

நெடுநாள் திருமணமாகாமல் பிரம்மச்சாரியாக இருப்பவனை நோக்கி பிள்ளையாருக்குத் திருமணம் எப்போது? என்பது கூறுவது வழக்கம்.

**அவன் என்ன பெரிய கொம்பனோ?**

அவன் கணபதி போல மிகவும் வலிமை வாய்ந்தவனோ? என வினவுவதும் வழக்கிலுள்ளது.

**கம்மென்றிரு எல்லாம் நடைபெறும்**

கம் என்ற விநாயக மந்திரத்தை உச்சரித்தால் அனைத்தும் காரியங்களும் தடையின்றி நடைபெறும் என்பர்

**பிடித்து வைத்த பிள்ளையார் போல**

ஒருவன் செயலாற்றாமல் அசையாமல் சும்மா இருப்பதை இப்பழமொழி குறிக்கின்றது.

**-கு.கங்காதேவி**

**சுவாமி விவேகானந்தரின் நீதிநெறிக் கருத்துக்கள்**

ஒரு மனிதனுக்கு நன்னெறி என்பது ஒழுக்கமாகும். இவற்றின் உண்மையான அடிப்படையை அடைவதற்கு அறிவு தேவைப்படுகிறது. மனிதனின் அறிவு என்பது அவனின் நல்வாழ்விற்குத் துணைபுரிவதாகும். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் செயலிலும் அறிவு மட்டுமே நம்மைக் காப்பாற்றுகிறது. இந்த அறிவே ஒழுக்கமான வழிபாடாகும்.

நீதிநெறி என்றால் ஒருமை அதன் அடிப்படை பிறர்க்கு நன்மை செய்வது. மனிதன் தன்னுடைய உணர்வுகளை பிரபஞ்சத்துடன் ஒன்றாக இணைக்கிறான் அதன் வெளிப்பாடே அன்பு கருணையாகும்.

ஒரு மனிதனுக்கு தீமையின் வித்து சுயநலமின்மை. நன்மைதான் தீமையை உண்டாக்குகிறது. நாம் கொலை செய்பவன் தன் குழந்தையின் மீதுள்ள அன்பால் தூண்டப்பட்டு கொலைச் செய்துள்ளான். அவன் வைத்திருக்கும் அன்பு கட்டுண்டு கிடைக்கிறது. இது தீமையை விளைவிக்கிறது. இப்படியின்றி இவ்வுலகத்து உயிர்களிடம் சுயநலமின்றி அன்பு, வைப்பது தான் நீதி நெறியாகும்.

**“நான் அல்ல” “நீ தான்”** என்று நீதிநெறி புலப்படுத்துகிறது. நான் தான் முதலில் என்று புலன்கள் கூறுகின்றன. அறநெறி நான் தான் கடைசி என்று கூறுகிறது. நாம் எல்லோரும் உலகிற்குக் கடன்பட்டிருக்கிறோம். உலகம் எந்த வகையிலும் நமக்குக் கடன்படவில்லை உலகத்திற்கு நாம் ஏதாவது நன்மை செய்ய முடிந்தால் அது பெரும்பேறு உலகிற்கு உதவி செய்தால் நமக்கு நாமே உதவிசெய்தற்கு சமமாகும்.

இளைஞர்களின் எண்ணங்கள் முழுவதும் சுதந்திரம் பெறுவதுதான் இவர்களின் முழுமையான சுயநலமின்மையின் மூலம் மட்டுமே சுதந்திர நிலையை அடைய முடியும் சுயநலமற்ற ஒவ்வொருவரின் எண்ணமும் வாக்கும் செயலும் லட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது இதுவே நீதிநெறியாகும்.

உண்மை, தூய்மை, தன்னலமின்மை இந்த மூன்றும் எங்கே இருந்தாலும் இவற்றைப் பெற்றிருப்பவர்களை அழிக்க வானுலகிலும் மண்ணுலகிலும் எந்தச் சக்தியும் கிடையாது. ஒருவனிடம் இம்மூன்றும் இருக்குமானால் இவ்வுலகமே எதிர்த்தாலும் அவனுடைய நன்னெறி ஒழுக்கம் அவனுக்குத் துணையாக நிற்கும்.

பணமோ, பெயர் புகழோ, கல்வியறிவோ எதுவும் சாதிக்க முடியாது, குணநலன் ஒன்றுதான் கடினசுவர்களையெல்லாம் பிளந்து கொண்டு வெற்றியடையச் செய்யும்.

**-க.கலைச்செல்வி**

## யானை ஓர் அதிசிய விலங்கு

**யானை-கரியது**

**யா-பெரிய, ஐ-வியப்புப்பொருள், யானையின் உருவத்தைக் கண்டு வியப்பும், அச்சமும் கொண்டதால் யானை என்று அழைக்கப்பட்டிருக்கலாம். யானையின் சத்தத்தைப் பிளிரல் என்பதற்கேற்ப பிளிறு-பீள்-பீளி, வீள் + று என அதன் ஒலியின் அடிப்படையில் தோன்றியதாகக் குறிப்பிடுவர்.**

யானை பாலூட்டி வகையைச் சேர்ந்த தாவர உண்ணி விலங்காகும். இது நிலத்தில் வாழும் விலங்குகளுள் மிகப் பெரியதாகும். மிக நீண்ட நாட்கள் (70 ஆண்டுகள்) வாழக்கூடியது. சிங்கம், புலி போன்ற விலங்குகள் கூட நெருங்க முடியாத வலிமை கொண்டது யானைகளில் மூன்று இனங்கள் மட்டும் இன்று எஞ்சியுள்ளன அவை,

**1.ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள்**

**2. ஆப்பிரிக்கக் காட்டு யானைகள்**

**3. ஆசிய யானைகள்**

ஆண் யானை **“களிறு”** என்றும், பெண் யானை **“பிடி”** என்றும், குட்டி **“கன்று”** மற்றும் **“குட்டியானை”** என்றும் அழைக்கப்படுகிறது. ஆப்பிரிக்க யானைகளில் ஆண், பெண் இரண்டுக்கும் தந்தம் உண்டு. ஆசியப் பெண் யானைகளில் தந்தம் அரிதாகவே காணப்படுகிறது. யானைகள் 16 மணி நேரம் உணவு சேகரிப்பதில் ஈடுபடுகின்றன. நன்கு வளர்ந்த யானைகள் நாள் ஒன்றுக்கு சுமார் 140 முதல் 270 கிலோ வரை உணவு உட்கொள்கின்றன. ஆண் யானைகள் பொதுவாக 3 மீட்டர் உயரமும் 6000 கிலோகிராம் எடையும் கொண்டவை. யானை பெருத்த உடலைக் கொண்டிருந்தாலும் மலை மீது செங்குத்தான இடங்களிலும் திறம்பட ஏறவும் இறங்கவும் வல்லது.

யானையின் சிறப்பான உறுப்பு அதன் தும்பிக்கை. இது யானைகளில் மட்டும் சிறப்பாகக் காணப்படுகிறது. தும்பிக்கையானது மொத்தம் 40,000 தசைகளால் ஆனது. தும்பிக்கையால் சிறுகுச்சி முதல் பெரிய மரம் வரை தூக்கமுடியும் யானையின் பல்தான் தந்தம் ஆகும். இதைக் **“கோடு”** என்றும் **“எயிறு”** என்றும் கூறுவர். இது வளைந்து காணப்படுவதால் கோடு எனப்பட்டது. யானையின் சினைக் காலம் 22 மாதங்கள் ஆகும். இதுவே பாலூட்டிகளில் மிக நீண்ட சினைக்காலத்தைக் கொண்டது. இவை ஒரே ஒரு கன்றையே ஈனுகின்றன. இரட்டைகள் பிறப்பது மிகவும் அரிது. பிறந்த யானைக் கன்றானது 90-115 கிலோ கிராம் எடை கொண்டது.

சங்க இலக்கியங்களில் யானைகள் சிறப்பிடம் பெற்றுள்ளதை சங்க இலக்கிய அடிகளின் வழி அறிய முடிகின்றது. யானை, வேழம், களிறு, பிளிறு, கலபம், மாதங்கம், கைமா, உம்பல், வாரணம், அஞ்சனாவதி, அத்தி, அததினி, அரசுவா, அல்லியன், அனுபமை, ஆம்பல், ஆனை, இபம், இரதி, குஞ்சரம், இருள், தும்பு, வல்விலங்கு, கிரி, அஞ்சனம் போன்ற சிறப்புப் பெயர்களால் யானைகள் சுட்டப்பட்டுள.

**-ந.முத்துமணி**

**வாழவந்தான்**

சேவல் கொக்கரிக்கும் ஓசை கேட்டதும் கண்விழித்த மங்கலம் தன் திருமாங்கல்யத்தை கண்ணில் ஒத்திக்கொண்டு, தன் கணவனின் பாதம் தொட்டு வணங்கி, என்னங்க சீக்கிரம் வேலைக்குப் போகனும்'னு சொன்னீங்களே. எழுந்திரிங்க, என எழுப்பியவளின் குரல் கேட்டு எழுந்தான் வாழவந்தான். எழுந்தவன் படுக்கையறையில் அமர்ந்து தன் கைகளை ஒன்று சேர்த்து இன்றைய பொழுது நல்ல பொழுதாகவும், என்னால் முடிந்தளவு சிறிய உதவியைச் செய்யவேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டிக்கொண்டே எழுந்தான். அருகில் சிணுங்கிய பத்துவயது மகள் கோடீஸ்வரியை மெல்லத்தட்டிக் கொடுத்தான். குழந்தை கண்விழித்து அப்பா டீச்சர் கணக்கு நோட்டு வாங்கிட்டு வரச்சொன்னாங்க. இல்லையினா முழங்கால் போடனும்ன்னு சொன்னாங்கப்பா, தன் வறுமையை அறியாத குழந்தையின் மழலை மொழியை ரசித்துக்கொண்டே கண்ணு, நீ கிளம்பி பள்ளிக்கூட்டத்திற்குப் போ, கணக்கு டீச்சர் வருவதற்குள் அப்பா உனக்கு கணக்குநோட்டு வாங்கிட்டு வருகிறேன் என்று குழந்தையை சமாதானப்படுத்தி நெற்றியில் முத்தமிட்டு வேலைக்குக் கிளம்பினான். திருச்சி,

ஆறு மணிக்கெல்லாம் பேருந்து நிலையத்திற்கு வந்துவிட்டான். கையில் எட்டண்ணா மட்டுமே இருந்தது. டீ குடிக்கக் கூட வழியில்லாமல் சத்திரம் பேருந்திற்காகக் காத்துக் கொண்டிருந்தான் அப்போது ஒரு பிச்சைக்காரன் ஐயா, பசிக்குது காசு தாங்க என்று கேட்டு புலம்ப, பேருந்து நிலையத்தில் நின்ற எவருமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. உடனே வாழவந்தான் தன்னிடமிருந்த எட்டண்ணாவை அவரிடம் கொடுத்தான். அதை பார்த்துக்கொண்டிருந்த நண்பன் அழகேசன் டேய்! நீயே சிங்கிள் டீ குடிக்கமுடியாமல் தடுமாறுகின்ற, இதுல தர்மம் வேற என்று கிண்டலாகப் பேச, அடே நான் நல்லா வாழணும் தான் என் ஆத்தா அப்பன் வாழவந்தான்னு பேரு வைச்சாங்க, ஆனா அது என் வாழ்க்கையில் சாத்தியமல்லை இப்படி தர்மம் பண்ணு'னா அவர் மனதில் வாழ்வேன்ல அதுபோதும் என்று பேசிக்கொண்டிருக்கும் போதே மிகுந்த வேகத்தில் அலாரம் அடித்துக்கொண்டே சத்திரம் பேருந்து பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்தது சரியான கூட்டம். ஏறுவோருக்கும், இறங்குவோருக்கும் சண்டை ஒருபக்கம், மறுபக்கம் பேருந்தின் டிக்கியைத் திறக்கமுடியாமல் தடுமாறும் நடத்துனர் எப்படியோ ஒரு வழியாக வாழவந்தான், காய்கறி மூட்டைகளை இறக்கி , தன் கைவண்டியில் ஏத்தினான், வழக்கத்திற்கு மாறாக அதிக மூட்டைகளை வண்டியில் ஏத்திருந்தான். இழுத்தால் வண்டிவரவில்லை. உதவிக்கோ எவருமில்லை, தன் மகளுக்கு கணக்குநோட்டு வாங்கவேண்டும் குழந்தை நம்மால் முழங்கால் போடக்கூடாது என்று எண்ணிக்கொண்டே மூச்சை உள்வாங்கிக்கொண்டு கைவண்டியை இழுத்தான். ஏதோ ஒரு வழியாக மார்க்கெட்டுக்குக் காய்கறி மூட்டையை கொண்டுவந்து இறக்கினான். கையில் பணம் கிடைக்க தாமதம் சரியாக ஒன்பதரை மணி ஆனவுடன் முதலாளி நூறு ரூபாய் பணம் கொடுத்தார். கையில் பணம் கிடைத்தவுடன் வாழவந்தான் தன் கைவண்டியை விரைந்து அழுத்தினான். கடைக்குச் சென்று கணக்கு நோட்டு வாங்கிக் கொண்டு, தனக்காக காத்துக் கொண்டிருக்கும் மகளை நினைத்துக் கொண்டே பள்ளிக்கூடம் நோக்கி சென்று கொண்டிருந்தான்.

மகளை நல்லா வளக்கனும் டாக்டர் ஆக்கனும் அவ கேட்டது எல்லாம் வாங்கிக் கொடுக்கணும் என்ற கற்பனை யோடு கைவண்டி வேகத்திற்கு ஓடிக் கொண்டிருக்கும். போதே, எதிரே தன் கட்டுப்பாட்டை மீறி வந்த லாரி வாழவந்தான் மேல் மோதியது. மோதிய வேகத்தில் வாழவந்தான் தடுமாறி விழுந்தான். மண்டை பிளந்து இரத்தம் பீறிட்டது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது வாழவந்தான் கண்களோ கணக்கு நோட்டின் மேல் இருந்தது. அதை தன் கையால் வாரி எடுத்து அணைத்துக் கொண்டே மயக்கமானான். வீட்டிற்கு தகவல் அனுப்பப்பட்டது. அவனது மனைவி மங்கலமோ, அமங்கலமான தலைவிரி கோலமாக, கண்ணீரும், கம்பலையுமாக அழுது புரண்டு மருத்துவமனைக்கு ஓடி வந்தாள், மருந்துவர்களோ பரிசோதனை செய்து உங்கள் கணவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டுள்ளது. மூளையைத் தவிர மற்ற உறுப்பு இயங்கும் நீங்கள் உடல் உறுப்புகளைத் தானமாக வழங்க அனுமதி கொடுத்தால் உங்கள் கணவனின் கண், இருதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற உறுப்புகளை எடுத்து மற்றவர்களுக்குப் பொருத்தி அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கலாம், வாழ வந்தானால் பல உயிர்கள் வாழலாம் என்று கூறினார். கண்ணீரைத் துடைத்தவளாய் மங்கலம் ஐயா, என் கணவன் தினமும் என்னால் முடிந்த சிறிய உதவியை செய்யனுமுன்னு இறைவனிடம் வேண்டுவார். அதனால் தான் என்னவோ மிகப்பெரிய உதவியை செய்து எல்லோர் உள்ளத்திலும் வாழப்போறார் அது எனக்குப் பெருமைதான் நீங்கள் ஆக வேண்டிய காரியத்தை கவனியுங்கள் என்று கூறி சுவரில் சாய்ந்தபடி அமர்ந்தவளை நோக்கி, மகள் அம்மா, கணக்கு டீச்சர் லீவு, நல்ல வேளை நான் முழங்கால் போடாம தப்புச்சேன், அப்பா எங்கம்மா? என்று மழலைமொழியில் கேட்டாள் கோடீஸ்வரி எதுவும் பேச இயலாமல் கண்ணீர் மட்டும் கலங்கி நின்றது மங்கலத்திற்கு.

**-லெ.பொ.பிரியா**

**சிந்தனைத் துளிகள்**

முதல் முயற்சியில் வெற்றி பெறுபவன்

அதிர்ஷ்டசாலி

இரண்டாம் முயற்சியில் வெற்றி பெறுபவன்

புத்திசாலி

மூன்றாம் முயற்சியில் வெற்றி பெறுபவன்

தைரியசாலி

நான்காம் முயற்சியில் வெற்றி பெறுபவன்

அனுபவசாலி

வாழ்நாள் முழுவதும் முயற்சியில் வெற்றி பெறுபவன்

சாதனையாளன்

**இன்பத்தின் சாவி**

ஒரு மணி நேரம் இன்பம் வேண்டுமா?

ஒரு குட்டித் தூக்கம் போடுங்கள்

ஒரு  நாள் இன்பம் வேண்டுமா?

உல்லாசப் பயணம் செல்லுங்கள்

ஒரு வருடம் இன்பம் வேண்டுமா?

நாட்காட்டியைப் பயன்படுத்துங்கள்

சில வருடம் இன்பம் வேண்டுமா?

செல்வந்தராகுங்கள்

வாழ்நாள் முழுவதும் இன்பம் வேண்டுமா?

நோயற்ற வாழ்வு வாழுங்கள்

**-ஆ.அருள்சாமி**

## ஔவையின் நீதிநூல்களில் உணவுமுறைகள்

### முன்னுரை

மனிதர்களுக்குத் தேவைப்படும் உணவு, உடை, உறையுள் என்பனவற்றுள் அடிப்படைத் தேவையாக உணவு என்பது இடம்பெறுகின்றது. ஏனெனில் உடையும், உறையுளும் இல்லாமல் கூட மனிதன் உயிர் வாழ முடியும். ஆனால் உணவு என்ற ஒன்று இல்லையேல் மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ்வது என்பது இயலாது. அத்தகைய உணவைப் பற்றி ஔவையார் சுட்டும் கருத்துக்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஔவையின் நீதிநூல்கள்

சங்க இலக்கியங்கள், நீதி நூல்கள், தனிப்பாடல்கள் என ஔவையார் பாடிய பாடல்கள் நமக்குக் மிகுதியாகக் கிடைக்கின்றன. எனினும் அவற்றையெல்லாம் பாடிய ஔவையார் ஒருவரே என்றும், அப்பெயரை உடைய பலர் என்றும் பல கருத்துக்கள் இலக்கிய உலகிலே நிலவி வருகின்றன. ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்ற நான்கு நூல்களில் ஔவையார் நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் உணவைப் பற்றிப் பேசியுள்ளார். உணவுகளில் திட உணவுகள், நீர்ம உணவுகள் என இருவகை உணவுகள் உள்ளன. ஔவை தன் நீதிநூல்களில் இவ்விருவகை உணவு முறைகளைப் பற்றிய செய்திகளை பதிவு செய்துள்ளார்.

### உணவுப் பொருட்கள்

ஔவை நீர்ம உணவுகளாகிய பால் (கொன்-60, மூது-5), தாய்ப்பால் (கொன்-62), தண்ணீர் (நல்-32) போன்றவற்றைப் பல இடங்களில் சுட்டுகின்றார். திரவ உணவைச் சுட்டிய இவர் திட உணவுகளைச் சுட்டாது, திட உணவுகளுக்குத் தேவையான தானியங்களான நெல் (ஆத்-71), அரிசி (மூது-12), தானியங்கள் (ஆத்-13), காய்கறிகளான வாழைக்காய் (மூது-28), மாங்காய் (நல்-4), ஊண் உணவான மீன் (மூது-17) சிறந்த உணவாகிய அமுதம் (அமிர்தம்) (கொன்-70,75), நெய் சேர்த்த உணவு (நல்-24) முதலிய பலவற்றைக்குறிப்பிடுகிறார். அமுதம், நெய் சேர்த்த உணவு இவை இரண்டையுமே உணவுப் பொருட்களாகச் சுட்டுகின்றார். மற்றவை உவமையாக உள்ளன.

### மனிதனும் உணவும்

ஒரு மனிதன் கல்வி பெறுதல் முதல், நல்ல வருவாயில் வேலை செய்தல், சொத்து சேர்த்துத் திருமணம், குழந்தைகள் என சமூகத்தில் நல்ல நிலைமையை அடைதல் வரை அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால் அதற்கெல்லாம் அடிப்படை மனிதனின் உழைப்பே. மனிதனின் இத்தகைய செய்கைகள் யாவும் அவனது "ஒரு சான் வயிற்றுக்கே" ஆகும். ஆரம்ப நிலையில் தன் வயிற்றுக்கு உணவு தேடுதலில் தொடங்கி, கல்வி, வேலை, சொத்து என அவனது தேவைகள் ஆசையின் காரணமாக முடிவில்லாமல் நீண்டு கொண்டே செல்கின்றது. இதனைத்தான் ஔவையும்,

**"பாழி னுடம்பை வயிற்றை கொடுமையால்**
**நாழி யரிசிக்கே நாம்" (நல்-19(3-4))** என்கிறார்

பெறுதற்கரிய இத்தகைய உடலை வைத்துக்கொண்டு நாம் பேரின்பம் அடைய வேண்டுமே தவிர, பேராசை கொள்ளக்கூடாது என்று நம்மை அறிவுறுத்துகின்றார்.

**"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவமுயற்சி தாளாண்மை-தேனி**
**கசிவந்த சொல்லயர்மேற் தாமுறுதல் பத்தும்**
**பசிவத் திடப்பறந்து போம்" (நல்-26)**

என்றவற்றைப் பட்டியலிடுகின்றார்.

### வயிற்றிடம் ஔவை பேசல்

தமிழர்களின் இயல்பே, இல்லையென உணவையும் பொருளையும் தேடி வருவோர்க்கு, இயன்றதைக் கொடுத்தும், தம்மாலும் இயலாத சூழலில் மற்ற செல்வர்களிடமோ, அரசர்களிடமோ சென்று பொருள் பெற ஆற்றுப்படுத்துதலுமே ஆகும். அவ்வகையில் பாடிப் பிழைப்பை நடத்தி ஔவையும் அதியனிடம் நெல்லிக்கனி பெற்றதும், தனக்குப் பரிசில் தராமல் காலம் தாழ்த்திய மன்னனை **"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"** எனக் கடிந்துரைத்த நிலையை நோக்கும் பொழுது ஔவையும் வறுமையில் வாடிய நிலை புலனாகின்றது. "வயிறே உணவு கிடைக்காதபோது ஒரு நாள் உணவு உண்ணுதலை விட்டுவிடு என்று கூறினால் கேட்கவும் செய்யாய் உணவு மிகுதியாகக் கிடைக்கும்பொழுது இரண்டு நாளைக்குத் தேவையானதைச் சேர்த்து உண் என்றாலும் மறுதலிக்கின்றாய். இத்தகைய மனநிலையில் உள்ள உன்னோடு நான் எவ்வாறுகாலம் கடத்துவேன்? அது எனக்கு இயலாத தன்மையாகத்

தெரிகின்றது. (நல்-10) என்கிறார். புலமையும், வறுமையும் பிரியாதது என்பதற்கேற்ப வறுமைமிக்க ஔவை பாடிய இப்பாடல் நம்மைக் கண்கலங்கச் செய்கிறது. வறுமையைப் பற்றிய இப்பாடலில் இருந்து சங்க இலக்கிய ஔவையும், நீதி நூல் இயற்றிய ஔவையும உணர்வில் ஒருவரே என்பது புலனாகின்றது.

**இறைவனுக்கு உணவு படைத்து வழிபடல்**

விலங்குகளை வேட்டையாடி ஆதிகாலத்தில் உணவாக உட்கொண்ட மனிதன் நாளடைவில் காட்டைத் திருத்திக் கழனியாக்கி உணவுப் பயிர்களை விளைவிக்கத் தொடங்கினான். முதலில் இயற்கையைக் கடவுளாக வழிபட்ட மனிதன் நாளடைவில் உருவ வழிபாடு, அருவ வழிபாட்டை தத்தம் குடியினருக்குரிய வழிபாடாகக் கொண்டான் தனக்கு உணவை, உடையை, உறையுளை இத்தகைய இறைவன் தான் என எண்ணி அத்தகைய இறைவனுக்கும் தான் உண்ணும் உணவில் இனிப்புகளைக் கலந்து அதனை இறைவனுக்குப் படைத்து வழிபட்டு தன் நன்றிக்கடனை செலுத்தி உண்ணத் தலைப்பட்டனர். ஔவை மூதாட்டியும் தனது வேண்டுதலை விநாயகப் பெருமானிடம் உரைக்கும் பொழுது

**"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றுந் தா" (நல்வழி -1)**

என்று இறைவனுக்குப் படைக்கும் உணவைப்பட்டியலிடுகின்றார்.

**உணவுப் பொருட்களை விளைவித்தல்**

ஔவையார் நீதிநூல்களில் பல இடங்களில் நிலத்தில் விவசாயம் செய்து தனக்குத் தேவையான உணவைத் தானே விளைவித்து உண்பதை

**"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு" (நல்-12 (3-4))**

எனச் சுட்டியுள்ளார் மேலும் இவை போன்ற சில கருத்துக்களையும் வேறு சில விதங்களில் "பூமி திருத்தியுண்" (ஆத்-) எனக் கட்டளையாகவும் "பிறர்க்கு அடிமை செய்து உண்பதைக் காட்டிலும் தானே உழுது உண்பது இன்பம் தரும்" (கொன் - 46) "உழைத்து உண்ணும் உணவே சிறந்த உணவாகும்" (கொன்-69) என்நெல்லாம் தன் நூல்களில் விவசாயத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**உணவுப் பொருட்களைத் தானமாகக் கொடுத்தல்**

உணவைத் தானம் கொடுத்தலைப் பற்றி ஔவை (ஆத் - ) **"ஐயமிட்டு உண்"** என்ற இதில் ஏழை எளியவர்களுக்கு உணவிட்ட பின்னரே தான் உண்ண வேண்டும் என்ற கருத்து பொதிந்துள்ளது. மேலும் இதே கருத்தை கொன்றை வேந்தனில் "சையொத்திருந்தால் ஐயமிட்டுண்" (கொன்-34) என்றும், நல்வழியில் "மழை இன்மையால் ஆறுவற்றி வறண்ட காலத்தும், தன்னிடம் உள்ள ஊற்று நீரால் உலகத்தவரின் தாகத்தைப் போக்கும், அதுபோல நல்ல குடியில் பிறந்தவர், தான் வறுமையடைந்த காலத்தும் தம்மால் இயன்ற அளவு உணவு தானத்தை அளிப்பர்" (நல்-9). "இந்நிலையில்லா வாழ்க்கையில் இறப்பு என்பது எப்போதும் வரலாம். அதலால் இறப்பதற்குள் அறஞ்செய்து உண்டு வாழ்தலே சிறப்பு" (நல்-10) என்றெல்லாம் சுட்டுகின்றார்.

**உணவுண்ணும் முறைகளென**

ஔவை நாம் உணவை உட்கொள்ள வேண்டிய முறைகளைப் பலவாறு பட்டியல் இடுகின்றார். பால் மற்றும் பால் பொருட்களைப் பற்றிய உணவுப் பொருட்களை மூன்று இடங்களி சுட்டுகின்றார் நீர்ம உணவை உண்ணுவதாக இருந்தாலும் அதனையும் உரிய நேரத்தில் அருந்த வேண்டும் என்பதைப் "பாலோ டாயினுங் காலம றிந்துண்" (கொன்-60) என்றும், "தாய்ப்பால் குடித்து வளர்ந்த குழந்தை எப்பாரத்தையும் தாங்கும்" (கொன்-62) எனக் குழந்தை உண்ண வேண்டிய அமுதமாகிய தாய்ப்பால் உணவைப் பற்றியும், "நெய்யினால் உணவு மாண்பு பெறும்" (நல்-24) அத்தகைய உணவை நாம் உண்ண வேண்டும் என்றும் கூறுகின்றார். இவ்வாறு நாம் உண்ணும் இத்தகைய பால் உணவுகளையே நாளடைவில் மக்கள், இறைவன் உண்ணும் உணவென, இறைவனுக்குப் படைத்தும் வழிபட்டதனையினை ஔவையின்

**"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை" (நல்வழி-1)**

என்ற பாடல் நமக்கு புலப்படுத்துகின்றது. மேலும் "நாம் உண்ணக் கூடிய உணவு நீர்ம உணவே யாயினும் உழைத்து உண்ணும் அவ்வுணவே சிறந்த உணவு" என்று (கொன்-69) கூறுகின்றார். அவ்வாறு வருத்தி உழைத்து உண்ணாது பிறர் உழைப்பில் விளைந்த உணவை உண்ணும் மனிதர்களை "வருந்தி உழைத்து பொருளைச் சேர்த்து உண்ணாத

பாவிகளே, நீங்கள் இறந்த பின் நீங்கள் சேர்த்து வைத்த பொருளை யார் அனுபவிப்பர் பிறர் உழைத்த அனைத்தும் வீணே" என அவர்களைக் கடிந்து உரைக்கின்றார். மற்றொரு இடத்தில் "மருந்தே யாயினும் விருந்தோ டுண்" (கொன்-70) எனக் கூறுகின்றார். இதில் அமுதம் கிடைத்தது எனத் தனித்து உண்ணாது, விருந்தினரோடு சேர்ந்து உண் எனக்கூறி அறிவுறுத்துகின்றார்.

**உணவை உண்ணக் கூடாத முறைகள்**

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு எனத் தமிழ்ப் புலவர் ஒருவர் சுட்டியுள்ளார். இதனைத் தான் ஔவையும் "அளவுக்கு மேல் உண்ணுவதை விரும்பாதே." (ஆத்-90) என உணவை மிகுதியாக உண்ணக்கூடாத முறையைச் சுட்டுகின்றார். அவ்வாறு உண்ணும் உணவிலும் நோய் தரும் தின்பண்டங்களை உண்ணாதே என்பதை "நுண்மை நுகரேல்" (ஆத்-69) "புலால் உண்ணுதலைத் தவிர்த்துவிடு" (கொன்-63) என்றும் சுட்டுகின்றார். மேலும் பெண்களுள் உண்ணும் முறையைச் சுட்டும்பொழுது,

**"உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" (கொன்-5)**

எனக் கூறுகின்றார். மேலும் பிறரிடம் ஆசை வார்த்தை கூறி உணவை வாங்கித் தின்னக்கூடாது எனபதை,

**"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்**
**இச்சை பல் சொல்லி இடித்துன்கை - *சீச்சீ***
**வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது**
**உயிர்விடுகை சால உறும்" (நல்-14)**

என உரைக்கின்றார்.

**விருந்தோம்பல் செய்வதும், விரதமும்**

உணவைப் பற்றிய மிகுதியான செய்திகளைத் தன் நூல்களில் பதிவு செய்துள்ள ஔவை ஓரிடத்தில், உணவோடு தொடர்புடைய விருந்தோம்பலைப் பற்றி, "விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்" என்ற சுட்டுகின்றார். இதிலிருந்து விருந்தோமபல் என்னும் பண்பைச் செய்யாதவரின் இல்லறம் சிறக்காது என்ற கருத்து புலப்படுத்தப்படுகின்றது.

**விரதம்**

நித்தமும் மூன்று வேளை உணவுண்ணும் மக்கள் தாம் மரபாக வழிபடும் கடவுளர்களைத், தான் நினைத்த செயல் சிறப்பாக நடந்தேற வேண்டும், என எண்ணி வேண்டி அதற்காக ஓர் நாளோ ஓர் வேளையோ உணவு உண்ணுதலைத் தவிர்த்து இறைவனையே எந்நேரம் மனதில் எண்ணி வழிபட்டிருப்பர். இவ்வாறு உணவு உண்ணாது இறைவனை வழிபடுவதால் அவ்விறைவன் தாம் நினைத்த செயலைச் சிறப்பாக நடத்தி வைக்கும் என்பது மக்களின் தீராத நம்பிக்கை ஆகும். ஔவையாரும் அவ்விரதத்தைக் கடைபிடிக்க வேண்டிய முறை குறித்து பொழுது,

**"நல்ல கொள்கையை விடாமல் காப்பதே விரதமாகும்" (ஆத்-33)**

என்றும் **"நோன்பென்பதுவே கொன்று தின்னாமை"** (கொன்-58) என்றும் சுட்டுகின்றார்

**முடிவுரை**

ஔவையார் மனிதர்களின் இன்றியமையாத் தேவையாகிய உணவுப் பொருட்கள், உணவுப் பொருளை விளைவித்து உண்ணும் முறைகள், உணவை உண்ணக்கூடிய முறைகள் உண்ணக் கூடாத முறைகள், உணவுப் பொருட்களைத் தானம் கொடுத்தல், விரதமுறைகள், உணவின் இன்றியமையாமை, உணவின் முக்கியத்துவம் போன்ற உணவைப் பற்றிய பல்வேறு செய்திகளை விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

**-மு.செண்பகவள்ளி**

**தமிழாயிரம் - அதிகாரம் -2**

**தமிழ்த் தோற்றம்**

1. நீ யென்ன நானுந்தான்!  நீள்தமிழ் போற்றாமல்
சீயென்று தள்வோமோ சேர்ந்து?

2. சேர்ந்த தமிழன் செறிந்த குறிப்புகளால்
நேர்ந்து மொழிந்தான் நினைத்து.

3. நினைத்த முக்குறி கைக்குறி நேர்ந்த
வினைக்குறி என்றறி வித்து.

4. வித்து முளைத்து விளைவாகும் நீர்மைபோல்
கொத்தாய் முளைத்த குறி.

5. குறியே  ஒலியாய் ஒலியின் பொருளாய்
நெறியாய் அமைந்தது நேர்.

6. நேரில் அறிந்ததை நேரில் இலாதாரும்
நேரறிய நீண்டது நா.

7. நாவால் ஒலித்தான்; மிழற்றினான்;  பின்னதுதான்
பூவாய் மலர்ந்த பொழில்!

8. பொழில் தான் பொதுமப் பொழிமொழியாய்ப் பல்லோர்
வழியே வளர்ந்தாள் தமிழ்.

9. தமிழென்ப தென்ன  'அழிழ் தமழ்' தென்ன
இமிழ்த்த இசையே இது.

10. இது நாள் வரையும் இயனிலை மாறா
ததுதான் இருத்தல் அறி.

-இளவழகனார்.

**நகைச்சுவைத் துணுக்குகள்**

பேசன்ட் : நான் எதைப் பார்த்தாலும் இரண்டு இரண்டாக தெரியுது
டாக்டர் : சரி அந்த சோபாவில் போய் உட்காருங்க
பேசன்ட் : இரண்டு சோபா இருக்கே டாக்டர், எதுல உட்காரணும்?

இராமு : நீ என்ன பேஸ்ட் யூஸ் பண்ற?
சோமு : பாபுஸ் பேஸ்ட்
இராமு : நீ என்ன சோப் யூஸ் பன்ற?
சோமு : பாபுஸ் சோப்
இராமு : அது என்ன புது பிராண்டா?
சோமு : அட பாபுன்றது என் ரூம் மெட்டோட பேருப்பா!

❖ உங்க முறுக்குக் கடையில் வேலை செய்ய ஆள் வேணும்னு சொல்றீங்களே,
எப்படிப்பட்ட ஆள் வேணும்?
❖ பல் இல்லாத ஆளா இருந்தா பரவாயில்லைங்க.

❖ கச்சேரிக்கு போனவர்கள் யாரும் திரும்ப வரவில்லை
ஏன்?
❖ இசையெனும் இன்ப வெள்ளத்தில் எல்லோரும் மூழ்கி விட்டார்கள்.

❖ அவர் ஏன் ஸ்கேலைக் கட்டிக் கிட்டு ஆத்துல இறங்குறாரு?
❖ அவர் ஆழம் தெரியாமல் காலைவிடமாட்டாராம்.

-அ.ரா.பானுப்பிரியா

**பழையமொழி - உண்மைப் பொருள்**

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பது பழமொழி. இப்பழமொழிக்கு ஐந்து பெண் குழந்தைகளைப் பெற்றால் அவர்களுக்கு வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்து முடிக்கின்றபொழுது அவனிடம் பொருள் என்ற ஒன்று இருக்காது. அப்பெண் மக்களைப் பெற்ற தந்தை கடைசியில் திருவோடு ஏந்தித்தான் வாழும் நிலை ஏற்படும் என்று தற்பொழுது பொருள் கூறப்பெறகிறது. ஆனால் இது தவறாகக் கூறப்படும் பொருளாகும். ஒரு குடும்பத்தில்

**1. ஆடம்பரமாய் வாழும் தாய்**

**2. பொறுப்பற்ற தந்தை**

**3. ஒழுக்கமற்ற மனைவி**

**4. ஏமாற்றும் உடன் பிறந்தோர்**

**5. சொல் பேச்சுக்கேளாத பிள்ளைகள்**

என இவை ஐந்தையும் ஒருங்கே பெற்றவன் நாடளும் மன்னனாக இருந்தாலும் தன் ஆளுமைத்திறன் அரசாட்சி, செல்வம் போன்ற அனைத்தையும் இழந்து ஆண்டியாக நேரும் என்பதே இதன் உண்மைப் பொருள்.

**பேரா.சே.செந்தமிழ்ப்பாவை**

## பத்திரகிரியார் காட்டும் யோக முறைகள்

சித்தர்களில் ஒருவரும் பட்டினத்தாரின் சீடருமான பத்திரகிரியாரின் காலம் கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதியாகும். அனைத்துப் பாடல்களும் எக்காலம் என முடிவதால் இவரின் பாடல்கள் எக்காலக் கண்ணிகள் என்று அழைக்கப்படுகின்றது. இவர் தனது மெய்ஞானப் புலம்பலில் பல வகையான யோக முறைகளைப் பற்றிக் கூறுகிறார். அவ்யோக முறைகளை பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பத்திரகிரியார்**

துளுவ நாட்டு உஞ்சேனை மாகாளம் என்னும் பகுதியை ஆண்ட மன்னன் பத்திரகிரி. ஒருசமயம் பட்டினத்தார் உஞ்சேனை மாகாளத்திற்கு வந்து மாகாளேஸ்வரரை வணங்கிவிட்டு, ஊருக்கு வெளியே காட்டில் உள்ள பிள்ளையார் கோவிலை அடைந்து அங்கு தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அந்நாட்டின் மன்னனான பத்திரகிரியாரின் அரண்மனையில் பெருஞ்செல்வங்களைக் கொள்ளையிட்டுத் திரும்பிய கள்வர்கள் விலைமதிக்கத் தக்க முத்து மாலை ஒன்றைப் பிள்ளையாருக்குக் காணிக்கையாக வீசிவிட்டுச் சென்றனர். அந்த முத்துமாலை பிள்ளையாருக்குக்குப் பின்னால் தியானத்தில் அமர்ந்திருந்த பட்டினத்தாரின் கழுத்தில் விழுந்தது. இறையுணர்வில் ஒன்றியிருந்த பட்டினத்தடிகள் இதை உணரவில்லை. மறுநாள் கள்வரைத் தேடி வந்த அரண்மனைச் சேவகர்கள் கண்மூடி ஆழ்ந்த யோகத்தில் இருக்கும் பட்டினத்தாரின் கழுத்தில் அரசனுடைய முத்து மாலையைக் கண்டு, இவரை அரசன் முன் இழுத்துச் சென்றனர். அரசன் கோபமுற்று "கள்வனை உடனே கழுவேற்றுக என உத்தரவிட்டாள அதை அறிந்த பட்டினத்தார் என் செயலாவது யாதொன்றும் இல்லை, இனித் தெய்வமே உன் செயலே என்று உணரப்பெற்றேன்" எனத் தொடங்கும் பாடலை பட்டினத்தார் பாட, உடனே கழுமரம் தீப்பிடித்து எரிந்தது. இதையறிந்து அரசன் ஓடி வந்து பற்றி எரியும் கழுமரத்தைக் கண்டு வியந்து தவத்தின் சக்தியை உணர்ந்து துறவு பூண்டு பட்டினத்தாரையே தன் ஞான குருவாகக் ஏற்றுக்கொண்டார்.

***"பத்திரகிரியார் வரலாறும் நூல் இயல்பும் ஒட்டுடன்***
***பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்***
***பட்டினத்தார்; பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ"***

என்று தாயுமானவ சுவாமிகளால் பாராட்டப் பெற்றவர் பத்திரகிரியார்

**ஆறு ஆதாரங்கள்**

நமது உடலில் மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை என ஆறு ஆதாரங்கள் உள்ளன. இவை உடலில் உள்ள நாளமில்லாச் சுரப்பிகளைக் குறிப்பதாகும். இதனை,

***"ஆறாதா ரங்கடந்த ஆனந்தப் பேரொளியை"***

என்று பத்திரகிரியார் குறிப்பிடுகிறார்.

**மூலாதாரம்**

மூலாதாரம் என்பது குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் உள்ள பகுதி. அதில் குண்டலி வட்டமாய் அந்த வட்டத்திற்கு நடுவே திரிகோணமாய் அதன் நடுவே நாலிதழுடைய ஒரு பூ வடிவமாய் கடப்பம் என்ற பூவைப் பூப்போன்றிருக்கும். அந்தப் பூவிற்கு நடுவில் ஓங்கார எழுத்தும் அதனுள்ளே விநாயகரும் வல்லபை சக்தியும் எழுந்தருளியிருப்பார்கள் என்றும் மாணிக்க நிறமுடையது என்பதை

***"ஆதார மூலத் தடியில் கணபதியைப்***
***பாதார விந்தம் பணிந்துநிற்பது எக்காளம்"      (பத்திரகிரியார் புலம்பல்.67)***

என்ற பாடலடிகளில் கூறுகிறார். மேலும் ஆறு ஆதாரங்களில் முதல் ஆதாரமான மூலாதாரத்தின் இறைவன் கணபதி ஆவார். எனவே இறைவன் குடிகொண்டிருக்கும் கோவிலுக்குச் செல்லும் போது முதலில் கணபதியை தரிசித்து விட்டுச் செல்லும் வழக்கத்தை நமது முன்னோர்கள் ஏற்படுத்திள்ளனர். எனலாம்

**சுவாதிஸ்டானம்**

சுவாதிஸ்டானம் என்பது மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடை மேலிருக்கும் சக்கரம் ஆகும். இச்சக்கரமானது நாற்சதுரவடிவமும் அதனுள்ளே ஆறிதழ்களை உடைய ஒரு புட்பவட்டமும் அதன் மத்தியில் லிங்கபீடமும் அதனுள்ளே நகார எழுத்தும் இருக்கும். அவ்விடத்திலே பிரம்மாவும் சரஸ்வதியும் இருப்பதாகவும் பொன்னிறமுடையதாகவும் கூறப்படுகின்றது. மேலும் இச்சக்கரமானது பஞ்ச பூதங்களில் மண்ணின் கூறாகும் என்பதை,

***"மண்வளைந்த நற்கீற்றில் வளைந்திருந்த வேதாவைக்***
***கண்வளரத்துப் பாரத்துள்ளே கண்டிருப்பது எக்காலம்" (பத்திர.புலம்பல்.68)***

என்ற அடிகளால் அறியலாம்.

**மணிபூரகம்**

மணிபூரகம் என்பது சுவாதிஸ்டான்திற்கு எட்டு விரற்கடை மேலுள்ள சக்கரமாகும். இச்சக்கரமானது 1,008 நாடி நரம்புகளும் சூழ நாடிகளுக்கு எல்லாம் வேர் போன்று உள்ளது. இதனையே சித்தர்கள் 'உந்திக் கமலம்' எனக் குறிப்பிடுகின்றனர். இது கொப்புழுக்கு நேரே ஏழாம் பிறை போல் இருக்கும். இதன் நடுவே பத்து இதழ்களைக் கொண்ட ஒரு பூ வட்டம் காணப்படும். 'மகார' எழுத்து காணப்படும். அங்கே திருமாலும் திருமகளும் எழுந்தருளியிருப்பதாகவும் பச்சை நிறமுடையதாகவும் சுட்டுகின்றனர். மணிபூரகமானது பஞ்ச பூதங்களில் நீரின் கூறாகும். (பத்திர.புலம்பல்.69)

மணிபூரகத்தில் 1,008 நாடி நரம்புகள் இருப்பதால் தான் மந்திரங்களை 1,008 தடவை உச்சரிப்பதன் காரணமாகும். மந்திரங்கள் நமது உடலில் மறைந்து கிடக்கும் ஆதாரங்களை வெளிக் கொண்டு வருவதற்கேயாகும். அதனால் தான் வேதங்களையும் மந்திரங்களையும் மறைபொருள் என்கிறார்கள் சித்தர்கள்.

**அனாகதம்**

நெஞ்சம் இருக்குமிடம் அனாகதமாகும். மணிபூரகத்திற்குப் பத்து விரற்கடை மேலுள்ளது. இதனை "இதயக் கமலம்" என்கின்றனர். இது முக்கோண வடிவத்தில் இருக்கும் அதன் நடுவே பன்னிரெண்டு இதழையுடைய பூ வடிவமும் அதனுள் 'சிகார' எழுத்தும் இருக்கும் என்பதை,

"மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்றும் உருத்திரனைத் தொழுது நிற்பது எக்காலம்" (பத்திர.புலம்பல்.70)

என்ற பாடல் விளக்கும். சிகாரத்தின் நடுவே சிவனும் பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினி நிறமுடைய பஞ்ச பூதங்களில் தேயு (தீ) அம்சம் பொருந்தியது அனாகதமாகும்.

**விசுக்தி**

விசுக்தி என்பது தொண்டை பகுதியாகும். அனாகதத்திற்குப் பத்து விரற்கடை மேலுள்ள பகுதி விசுத்தியாகும். இச்சக்கரம் பஞ்ச பூதங்களில் வாயுவைச் சார்ந்தது. இது அறுங்கோண வடிவத்தில் இருக்கும். இதன் நடுவே பதினாறு இதழை உடைய ஒரு பூ வடிவத்தில் நடுவே மகேசுவரனும் மகேசுவரியும் எழுந்தருளியிருப்பார்கள் என்பதை

***"வாயுவறு கோணமதில் வாழும் மகேச்சுரனைத்
தோயும் வகை கேட்கத் தொடங்குவது எக்காலம்" (பத்திர.புலம்பல்.71)***

என்ற பாடலடிகள் விளக்கும். இச்சக்கரமானது கருமை நிறத்தையும் 'வகார' எழுத்தையும் உடையது.

**ஆக்கினை**

புருவ மத்தியே ஆக்கினை எனப்படும். இது விசுக்தியிலிருந்து பன்னிரெண்டு விரற்கடை மேலுள்ளது. இதனை 'சிற்சபை என்கிறார்கள் சித்தர்கள். இச்சக்கரமானது பஞ்ச பூதங்களில் ஆகாயத்துடன் தொடர்புடையது. புருவத்தின் நடுவே மூன்று இதழை உடைய பூவின் நடுவே யகார அமைப்பில் இருக்கும். இதனுள்ளே சதாசிவமும் மனோன்மணியமும் வீற்றிருப்பார்கள் என்பதை

"***வட்டவழிக் குள்ளே மருவும் சதாசிவத்தைக்
கிட்டவழி தேடக் கிருபை செய்வது எக்காலம்" (பத்திர.புலம்பல்.71)***

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இதனைக் கொண்டு தான் ஆகாயத்திற்குரிய கோயிலான சிதம்பரத்தில் பொன்னாலான கூரையைக் கட்டியுள்ளனர்;.

**வாசியோகம்**

வாசியோகம் என்பது ஆறு ஆதாரங்களிலும் மூச்சுக்காற்றை ஏற்றி தலை உச்சிக்கு கொண்டு வரும் மூச்சு பயிற்சியாகும். இதனை

***"காசினியெலாம் நடந்து கால் ஓய்ந்து போகாமல்
வாசிதனில் ஏறிவருவது இனி எக்காலம்" (பத்திர.புலம்பல்.71)***

என்ற பாடலடிகளில் காசியாத்திரை சென்று மோட்சம் பெறுவதை விட வாசியோகம் செய்து வீடுபேற்றை அடைய வேண்டும் என்கிறார்.

**அட்டாங்க யோகம்**

அட்டாங்கம் என்றால் எட்டு. எட்டு வகையான யோக முறைகளாகும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிராத்தி, யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு யோகங்கள் ஆகும். இவற்றை கடந்து

அதீதமாகிய அறிவிற்குக் கிட்டாமல் விளங்கும் சிவத்தை அடைவது எப்போது (பத்திர.புலம்பல்.148) எனக் கேள்வி எழுப்புகின்றார்.

**முடிவுரை**

சித்தர்களின் ஒருவராகிய பத்திரகிரியார் முதலில் அரசராக இருந்து பட்டினத்தாரின் மூலம் சுகவாழ்வைத் துறந்து சித்தராக மாறியவர். இவர் தனது மெய்ஞானப் புலம்பலில் பல வகையான யோக முறைகளைப் பற்றி கூறுகின்றார். ஏழு வகையான சக்கரங்களைப் பற்றியும் அதன் அமைப்பு மற்றும் அதற்குரிய தெய்வங்கள் ஆகிய பல செய்திகளை கூறுகின்றார். இதனைக் கற்று அதன் மூலமே இறைவனை அடைய வேண்டும் என்னும் கருத்தை முன்வைக்கின்றார்.

**-வ.மீனாட்சி**

தி.பி-2048 (கி.பி.2017) மாசித்திங்கள்(பிப்ரவரி)

தேன்:1 துளி:2

பார் போற்றும் பழந்தமிழர் பண்பாடு- அதை
சீர் போற்றி என்றும் பண் பாடு.........

உயிர் தமிழ் எனதென்று உரக்கச் சொல்லும் இனியஉள்ளங்களுக்கு, உயர் வணக்கம்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பண்பாட்டு மையத்தின்ஆய்வாளர்களால் சென்ற திங்களில்தொடங்கப்பெற்ற இத்தேமதுரம் தெவிட்டாத அமுதஊற்றாய் உங்கள்பார்வைக்குக் கிடைத்திருக்கக் கூடும் என்று நம்புகிறோம்தைத் திங்களில்நாங்களிட்ட வித்தினை விளைச்சலாக்கும் முயற்சியில் மகத்துவமான மாசியில் இந்தமதுரம் வெளிவருகிறது

தமிழ் மாதங்களில் மாசி மாதம் மேன்மையானதுதை மாதத்தில் வழி காணும்மக்கள் மாசியில் வாழ்வின் ஒளி காண்கின்றனர்இந்தியாவில் உள்ள அனைத்துபுண்ணிய தீர்த்தங்களிலும்பெருங்கடற் கரைகளிலும் மாசி மாதத்தில் அமிர்தம்நிறைந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றனஆன்மீகப் பெரியோர்கள் கொண்டாடும் மாதம்மாசிஇறைவனின் அருளாசி பெற மாசிமகத்தில் கடலாடுவது தமிழர் பண்பாடு சங்கப் பனுவல்களை எல்லாம் முயற்சியின் பிறப்பிடமாய் நின்று நிலைப்படுத்தியநம் தமிழ்த்தாத்தா உவேசா அவர்கள் பிறந்த மாசற்ற மாதம் மாசிகிழக்கு திசையில்புதிய பல விடியல்களைத் தந்த எழுச்சிமிகு கவிஞர் தாராபாரதியைத் தந்தது மாசி மாதம்மாசியின் மகத்தில் பிறந்தவர் அகிலத்தை ஆள முடியும் என்னும் ஆழ் நம்பிக்கையைமனதின் மையத்தில் வீழச் செய்த மாதம் மாசி

அருட்செறிவும்அறிவுச்செறிவும் நிறைந்த இந்த மாசியில்பெரும்புயலாய் வீசிவரும் எங்கள் கருத்து மண்டலம் உங்கள் கணிணித் திரையில் மையம் கொள்ளும் என்னும்நம்பிக்கையோடு

ஆசிரியர் குழு,
தேமதுரம் - மின்னிதழ்

## நிலைக்கட்டும் நிலத்தடிநீர்

முகவுரை:

"நீரின்றி அமையாது உலகம்" என்கிறது வள்ளுவம். உலக உயிர்களின் அடிப்படை ஆதாரம் நீர் ஆகும். உலகு உய்வதற்கான நீரை நிறைவாகப் பெறுவதன் வாயிலாக நாடு நலம் பெற முடியும். இன்றியமையாமையின் இருத்தலின் விளைவான நீர் பெறும் வழிமுறைகள் இரண்டு. ஒன்று வான்வழி வரும் மழை. மற்றொன்று நிலமகள் தரும் ஊற்று. வான்மங்கை பொய்த்தாலும் நிலமகள் வளத்தைத் தந்தருள்வாள் என்ற எண்ணம் மக்களிடம் என்றும் உண்டு. இத்தகைய நிலத்தடி நீரின் மாண்பு, காப்பதன் நோக்கம் மற்றும் வழிமுறை ஆகியவற்றைத் தெளிவுறக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பண்டைத்தமிழகத்தில் நீர் மேலாண்மை:

பண்டைத் தமிழர்கள் பல துறையில் சிறந்து விளங்கியது போலவே நீர் வளத்துறையிலும் சிறந்து விளங்கி வந்துள்ளமைக்கு எண்ணற்ற சான்றுகள் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கிய காலம் நீர் வளத்தை மதித்த வளமிக்க காலம். வான் மழையைப் பெற்று நிலத்தில் சேகரித்து வேளாண்மையைப் பெருக்கி வளம் சேர்த்த காலம். பண்டை மக்கள் மழையைச் சேமிக்க ஏரி குளங்களை அமைத்த செய்தியை புறநானூறு,

"நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவன் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"

என்கிறது. இந்த சங்கச் சான்று பழந்தமிழக நீர் மேலாண்மையைப் பறை சாற்றும் ஆதாரமாய் நிற்கிறது.

மெல்ல மரணிக்கும் நிலத்தடி நீர்:

சங்க காலத்தில் பாதுகாக்கப்பட்ட நிலத்தடி நீர் வளர்ந்து வரும் சமுதாயச் சூழலில் சீர் கேடடைந்து வருகிறது. பெட்ரோலியப் பொருட்கள், செயற்கை வேளாண் இரசாயனங்கள், கடின உலோகங்கள்,தீங்கு ஏற்படுத்தும் கழிவுகள் , அளவிற்கு அதிகமான அங்கக பொருட்கள், படிமானங்கள், தொற்று ஏற்படுத்தும் கிருமிகள், காற்று வெப்ப மண் மாசுபாடுகள் ஆகியவை நிலத்தடி நீரை மரணிக்கச் செய்கின்றன.இதன் காரணமாய் மண்ணும், மரமும், மனித சமுதாயமும் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

நிலத்தடி நீரைக் காப்பதற்கான வழிமுறைகள்:

ஊட்டப் பொருள் மற்றும் உயிர்கொல்லி மருந்துகளைக் குறைத்தல், கழிவு நீரின் அளவைக் குறைத்தல், எண்ணைத் திரவியங்கள் நீரில் கலப்பதனைத் தடுத்தல், வேதிப் பொருள்களை நீரில் கலவாமல் காத்தல், புவி வெப்பமாயதலுக்கு எதிராகப் போராடுதல் போன்றவற்றின் வாயிலாக நிலத்தடி நீரைக் காக்க இயலும். கிணற்றால் அன்று ஊற்றெடுத்த வளம் இன்று பாதுகாப்பில்லாமல் பாழுங்கிணறாய் மாறிவிட்டது. பெருகிவிட்ட சீமைக்கருவேலங்களால் அருகிவிட்ட நிலத்தடி நீரை அம்மரங்களை வேரறுப்பதன் வாயிலாகக் காக்க முடியும்.

அமுதமாகிய நீர்:

இயற்கை கொடையாம் நீரை காசுக்கு விற்பனையாக்கும் நிலை இன்று வந்துவிட்டது. இந்நிலை தொடர்ந்தால்,

"ஆலை பூதகிகள்
பாலை பீச்சுவதால்
நாறும் ஆறுகளில்
ஜீவன் ஏதுமில்லை
தேசம் தாண்டுகின்ற
சாயத்துணிக் கழிவால்
நதியில் மீன்களில்லை
நாளை.....,.....
நதிகளுமில்லை.."

என்னும் கவிதை நனவாகக் கூடும். எனவே நிலத்தடி நீரை அமுதமாக எண்ணிக் காக்க வேண்டும்.

நிறைவுரை:

"திரவத் தங்கம்" என்றழைக்கப்படும் தண்ணீரால் தான் உலகம் திடமடையும். நிலத்தடி நீரை காக்காவிட்டால் உலகத்தின் மூன்றாம் போர் நீரால் அடைவது திண்ணம்.எனவே இனி வரும் காலங்களில் நீரை முனைந்து காப்போம்.வழிந்தோடும் ஒவ்வொரு துளி நீரும் நமது அடுத்த தலைமுறைக்கான சொத்து என்பதை மறவாமல் மனதில் பதிவோம்.

" நீரைப் போற்றுவோம்
நீடூழி வாழ்வோம்"

**-நெ.கிருஷ்ணவேணி**